இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

கலைஞர் 100 1924 - 2024

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 45 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 07 – வியாழக்கிழமை 24 செப்டம்பர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 45 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 07 - Thursday 24 September 2026 - Dak 8 Pages ₹ 5.00

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சொன்ன “மின்வெட்டு – அரிவாள் வெட்டுக்கிடையேதான் போட்டி” என்பது நிரூபணம்!

# தமிழகத்தில் ஒரே வாரத்தில் 22 படுகொலைகள்!

## ரத்த ஆறாக ஓடிய சாலைகள்! அதிர்ச்சியில் உறைந்த மக்கள்!


## நிர்வாகத் திறனற்ற விஜய்! சிரிப்பாய் சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

**சென்னை, செப். 24 -**

**ஒரே நாளில் எட்டுக் கொலை’, ‘காவல் நிலையத்துக்கு அருகே ஓட ஓட விரட்டி வெட்டிக் கொலை’, ‘ஆள் மாறாட்டத்தில் இரட்டைக்கொலை’, ‘கல்லூரி மாணவருக்கு அரிவாள் வெட்டு... இதெல்லாம் கடந்த ஒரு வாரத்தில் பத்திரிகைகளை ரத்தக்கறையாக்கிய செய்திகள். சட்டம் ஒழுங்கு சீர்கேட்டால், தமிழ்நாடே கொலைக்களமாக மாறிப் போயிருக்கும் சூழல் உருவாகியிருக்கிறது. தி.மு.க. தலைவர் ஸ்டாலின், “இந்த ஆட்சியில் இரண்டே இரண்டுக்கு நடுவுலதான் போட்டியே... ஒண்ணு மின்வெட்டு, இன்னொண்ணு அரிவாள் வெட்டு...” என்று த.வெ.க. ஆட்சியைப் போட்டுத் தாக்கியிருக்கிறார் என்று ‘ஜூனியர் விகடன்’ 27,09,2026 தேதியிட்ட இதழில் சிறப்புக் கட்டுரை எழுதியுள்ளது.**

அக்கட்டுரை வருமாறு :-

அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் என எதிர்க்கட்சித் தலைவர்கள் பலருமே, சட்டம் ஒழுங்கு சந்தி சிரிப்பதாக விமர்சித்திருக்கின்றனர். “அந்த அளவுக்கா சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது?” என்ற கேள்வியுடன் விசாரணையில் இறங்கியது ஜூ.வி. டீம். செப்டம்பர் 14ம் தேதி தொடங்கி 20ம் தேதி வரை முன்பகை காரணமாகவும், அடிதடிப் பிரச்னையிலும் தமிழகத்தில் நடந்த கொலைகள் குறித்து மட்டும் விசாரித்தோம். கிடைத்த தரவுகள் நம்மை தூக்கிவாரிப் போடவைத்தன. அந்த ஏழு நாள்களில் நிகழ்ந்த 22 படுகொலைகள் தமிழகத்தையே அதிரச் செய்திருக்கின்றன.




### ரத்தக்களறியாகும் முன்விரோதக் கொலைகள்!

தூத்துக்குடி கே.சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளி கணேஷ்குமாருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த சில கட்டடத் தொழிலாளிகளுக்கும் முன்விரோதம் இருந்திருக்கிறது. செப்டம்பர் 14ம் தேதி மது அருந்தியபோது, கணேஷ்குமாருக்கும் எதிர்த்தரப்பினருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டு, கத்தியால் அவரது உடலில் ஆங்காங்கே குத்தியும், கல்லால் தாக்கியும் கொலைசெய்துவிட்டனர். அவரது உடலை, சாலை விரிவாக்கப் பணிக்காகத் தோண்டப்பட்ட பள்ளத்தில் போட்டுவிட்டு, தப்பியோடிவிட்டது கொலைகாரக் கும்பல். இது தொடர்பாக மூன்று பேர் கைதுசெய்யப்பட்ட சூழலில், “முன்விரோதம் காரணமாகவே கொன்றோம்” என்று வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள் கொலை செய்தவர்கள்.

திருச்சி மாவட்டம், சமயபுரம் நான்கு ரோடு பகுதியிலுள்ள டாஸ்மாக் கடையில், யார் முதலில் மது வாங்குவது என்ற போட்டியில் தகராறு ஏற்பட்டு, மருதூரைச் சேர்ந்த கூலித் தொழிலாளி பிரகாஷ் கொல்லப்பட்டிருக்கிறார். அதேநாளில், அதே போன்றதொரு மது அருந்தும் தகராறில் அடையாளம் தெரியாத ஒரு கூலித் தொழிலாளி பீர் பாட்டிலால் தாக்கப்பட்டு சத்தியமங்கலத்தில் கொலைசெய்யப்பட்டார். கோவை மாவட்டம், காரமடையில் பணம் கொடுக்கல், வாங்கல் காரணமாக எழுந்த தகராறில், டேனியல் என்பவர் கொல்லப்பட, அவரைக் கொலைசெய்த அல்ட்ரினைக் கைது செய்திருக்கிறது போலீஸ்.

வேலூர் கம்மவான்பேட்டையைச் சேர்ந்த பள்ளி வேன் ஓட்டுநர் இம்ரான் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவரை வழிமறித்துக் கொன்று வீசியிருக்கிறது ஐந்து பேர் கொண்ட கும்பல். நிலத் தகராறில் இம்ரானுடன் ஏற்பட்ட முன்விரோதத்துக்குப் பழி தீர்த்துக்கொள்வதற்காக ரமீஷ்கான் என்பவர் ஸ்கெட்ச் போட்டுத் தீர்த்துக்கட்டியது போலீஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது. தஞ்சாவூர், பள்ளியக்ரஹாரம் விக்னேஸ்வர் நகரைச் சேர்ந்தவர் வினோத் திவாகர். வீட்டில் இருந்த அவரை, செப்டம்பர் 15ம் தேதி நண்பர்கள் சிலர் தகராறு செய்து அழைத்துச் சென்றனர். அன்று இரவு தலை, முகம் சிதைக்கப்பட்ட நிலையில் வயலில் உயிரிழந்து கிடந்தார் வினோத் திவாகர். நடுக்காவேரி போலீஸார் நடத்திய விசாரணையில், மது போதையில் ஏற்பட்ட தகராறில் ஆறு பேர் சேர்ந்து வினோத் திவாகரைக் கொலை செய்தது ஏரியாவையே அதிரச் செய்தது.

### ஆள் மாறாட்டத்தில் இரட்டைக்கொலை!

சிவகங்கையில் நடந்த இரட்டைக் கொலைதான் ரொம்பவும் கொடூரம். கொடிக்காடு கண்மாய் பகுதியில், செப்டம்பர் 16ம் தேதி தெய்வேந்திரனும், அவருடைய நண்பர் பூப்பாண்டியும் ஒன்றாக அமர்ந்து மது அருந்திக்கொண்டிருந்தனர். திடீரென அங்கு வந்த மர்மக் கும்பல், இருவரையும் துரத்தித் துரத்திக் கொடூரமாக வெட்டிக் கொலைசெய்தது. குற்றவாளி களைக் கைதுசெய்யக் கோரி, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட, ஒரு சிறுவன் உட்பட 13 பேரைக் கைதுசெய்தது போலீஸ். விசாரணையில், ஊர்க்காவலன் என்பவரின் கொலைக்குப் பழிவாங்க வந்த இடத்தில், ஆள் மாறாட்டத்தில் இரண்டு பேரைக் கொன்றுவிட்டதாக உண்மையைக் கக்கியிருக்கிறது கொலைகாரக் கும்பல்.

அதேநாளில், திருச்சி துறையூர் அருகே கொட்டத்தூரில், 75 வயது முதியவரான கணேசனை, அவரின் மகனான மணி என்பவர் சொத்துத் தகராறு காரணமாக மரக்கட்டையால் தாக்கியும், அரிவாளால் வெட்டியும் கொலை செய்திருக்கிறார். செப்டம்பர் 17ம் தேதி, ஃபிளெக்ஸ் பேனர் வைக்கும் தகராறில், பாபநாசம் அருகேயுள்ள சத்தியமங்கலத்தைச் சேர்ந்த தளபதியைக் கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறது மூன்று பேர் கும்பல். ஈரோடு மாவட்டம், பவானியில் வயலை உழுவதற்காக வந்த டிராக்டரைத் தடுத்த காரணத்தால், காளநாயக்கர் என்கிற 71 வயது முதியவர் டிராக்டர் ஏற்றிப் படுகொலை செய்யப்பட்டார்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### சென்னை விமான நிலையத்தை தனியாரிடம் ஒப்படைக்க பிரதமருக்கு கடிதம்!

# துரோகக் கடிதத்தை ஒரு மாதமாக மறைத்தது ஏன்?

## தனியார் லாபத்திற்காக தரகு வேலை பார்ப்பதா? விஜய்க்கு அரசியல் விமர்சகர்கள் கண்டனம்!

**சென்னை, செப். 24 -**

**சென்னை விமான நிலையத்தை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் விஜய் எழுதிய கடிதம் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

சென்னை விமான நிலையத்தின் நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் விஜய் கடிதம் எழுதியதாக தகவல் வெளியானது. சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லம் ரீல்ஸ் போட்டு தம்பட்டம் அடித்துக் கொள்ளும் விஜய் அரசு, இந்த கமுக்க கடித விவகாரத்தில் கள்ள மவுனம் காத்தது.

வழக்கமாக முதலமைச்சரின் கடிதங்கள் செய்திக்குறிப்பாக ஊடகங்களில் வெளியிடப்படும். ஆனால் இந்த விவகாரத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பும் என்பதால் விஜய் அரசு, ரகசியம் காத்து வந்தது. இந்த நிலையில் பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் விஜய் எழுதிய கடிதம் வெளியாகி உள்ளது.

கடந்த மாதம் 5ம் தேதி, முதலமைச்சர் விஜய் எழுதிய இந்த கடிதத்திற்கு பிரதமர் மோடி எழுதிய பதில் கடிதம் மூலம் விஜயின் ரகசியம் கடித விவகாரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்தியாவில் உள்ள முக்கிய விமான நிலையங்களை ஏற்கனவே அதானிக்கு ஒன்றிய அரசு தாரை வார்த்து விட்டது. ஆனால் சென்னை உள்ளிட்ட விமான நிலையங்கள் மட்டுமே இந்திய விமான நிலைய ஆணையத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இவற்றையும் அதானியிடம் ஒப்படைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு தீவிரம் காட்டி வந்தது. தி.மு.க. ஆட்சியில் பாஜகவின் இந்த ஜம்பம் பலிக்கவில்லை.

இந்த நிலையில் ஒன்றிய அரசின் இந்த நோக்கங்களுக்கு தூபம் போடும் வகையில் சென்னை விமான நிலையத்தின் நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் விஜய் கடிதம் எழுதியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மக்கள் நலன் என நாடகமாடும் த.வெ.க. அரசு, இந்தத் துரோகக் கடிதத்தை ஒரு மாதம் முழுவதும் மக்களிடம் மறைத்தது ஏன்? பா.ஜ.க.வின் ‘தனியார்மயமாக்கல்’ கொள்கையைத் தமிழ்நாட்டில் செயல்படுத்த நினைப்பது தான் த.வெ.க.வின் கொள்கையா? ஒரு முதலமைச்சரின் வேலை பொதுத் துறைச் சொத்துகளையும் மாநில உரிமைகளையும் பாதுகாப்பதா? அல்லது தனியார் லாபத்திற்காகத் தரகு வேலை பார்ப்பதா? என அரசியல் விமர்சகர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### இடைத் தேர்தலும் சினிமா தானா?!

